# புறநானூற்றுப் புதையல் –9

## போலிச் சான்றோர்

கதை: இ.ஜே.சுந்தர்
ஓவியம்: ஷேக்




தொலைவில் வரும் புலவர் நரிவெரூஉத் தலையார், இவர்களை ஐயுற்று மரத்தில் ஒதுங்கிக் கவனிக்கிறார்.
முதுகண்ணன்: பயந்தால் பணம் சேர்க்க முடியாது. நகைமுகன் இருக்கிறார் நம்மைக்காக்க, அவர் ஒற்றரை எதிர்நோக்கியிருக்கிறேன்.
அப்போது ஒற்றர் ஓர் ஓலையோடு வருகிறார்.
ஒற்றர்: இப்போது இங்கு பேசுவது ஆபத்து. அரசரின் செய்தி ஓலையில் உள்ளது. படித்துப்பாருங்கள். விரைவில் புனல்நாடு சிங்கபுரத்தோடு இணைவது உங்கள் கையில். நாளை மீண்டும் இதே இடத்தில் சந்திப்போம்
3


கௌசிகன் : (படிக்கிறார்)
உடனே இவற்றைச் செயல்படுத்துங்கள்:
1. போர்வீரர்களுக்கு ஊதியம் குறைவு என்பதை உணர்த்தி அவர்களை அரசுக்கு எதிராகப் போராடச் செய்யுங்கள்
2. படையில் உள்ள யானைகளை நோய்க்கு உள்ளாக்கி மெதுவாக மடியச்செய்யுங்கள். விரிவான வழிகளை ஒற்றர் விளக்குவார்
4


முதுகன்னன்: இத்திட்டம் வெற்றிபெற்றால் நமக்குப் பெரும் பதவி தர நகைமுகன் காத்திருக்கிறார். ஓலையை இம்மரப்பொந்தில் ஒளித்து வைப்போம்.
5
அவர்கள் சென்ற பின் மரப்பொந்தில் உள்ள ஓலையை எடுத்துச்சென்று உடனே புலவர், மன்னர் புகழேந்தியைச்சந்திக்கிறார்.
6
அரசர் புகழேந்தி: என்ன கொடுமை இது! தலை நரைத்துச் சான்றோர்களாகக் காட்சியளித்த இவர்கள் இவ்வளவு அற்பர்களா? நாளை யமன் வந்து பற்றினால் இப்பணமும் பதவியும் என்னாகும்?
புலவர்: நல்லது செய்ய முடியாவிடினும் நாட்டுக்குக் கெடுதல் செய்யாமலாவது இந்த வயதில் இருந்திருக்கலாம். இவர்களை ஒறுத்து நாட்டைக்காப்பாற்றுங்கள் மன்னா.
7



இருவரும் அரசவையில்
சங்கிலியால் பிணைக்கப்பட்ட நிலையில்.
புகழேந்தி: உங்களுக்கு நான் என்ன குறைவைத்தேன் ? அரச கருவூலத்தையே உங்களை நம்பி ஒப்படைத்தேனே ! மீன் முள் போன்ற நரைமுதிர்ந்த தலை! சுருக்கம் விழுந்த கன்னங்கள்! பயனற்ற முதுமை! இந்த வயதில் போய் சீ சீ..
புலவர்: இன்றே உங்களை மன்னர் யமன் கையில் ஒப்படைத்தால் உங்கள் செல்வமும் செல்வாக்கும் கூட வருமா?
8




புகழேந்தி: இவர்களுக்குக் கடும் தண்டனை விதிப்பதற்கு முன் இவர்களைத்தூண்டிய நகைமுகனுக்கும் பாடம் கற்பிக்கவேண்டும். முதலில் இவர்களைப்போன்றோருக்கு மனதில் தைக்கும் வண்ணம் ஒரு பாடல் எழுதிப் புத்தி புகட்டுங்கள்.
புலவர் நரிவெரூஉத் தலையார்:
பல்சான் றீரே ! பல்சான் றீரே !
கயன்முள் என்ன நரைமுதிர் திரைகவுள்
பயனின் மூப்பின் பல்சான் றீரே !
கணிச்சிக் கூர்ம்படைக் கடுந்திறல் ஒருவன்
பிணிக்கும் காலை, இரங்குவிர் மாதோ;
நல்லது செய்தல் ஆற்றீர் ஆயினும்
அல்லது செய்தல் ஓம்புமின்; அதுதான்
எல்லாரும் உவப்பது; அன்றியும்
நல்லாற்றுப் படூஉம் நெறியுமார். அதுவே.
(புறம்: 195)
9